Registered at the G. P. O. as a News Paper No. 59-300.

# வெற்றிமணி

Registered No. 10, 845

மலர் 2. | 1. 4. 56. – விலைசதம் 25 | இதழ் 4

கி. இ. கு. போட்டி இல. 5. பரிசுரூபா 1000.
சுதந்திரன்போட்டி இல. 25. பரிசுரூபா 1000.

## வீரவாள் நாடகம்

| | | | |
|---|---|---|---|
| சந்தாவிபரம் வருடசந்தா | 12 இதழ் | ரூபா | 3-00 |
| 6 – மாதம் | 6 இதழ் | ரூபா | 1-50. |
| தனிப்பிரதி | | சதம் | 25 |

தேவை:–ஏஜண்டுகள்இல்லாதஇடங்களுக்கு ஏஜண்டுகள்தேவை இன்றேஎழுதுக

**Vettimani Baily Road Nawalapitiya.**

சிறுவர்போட்டிப்பிரவேசக்கட்டணக் கூப்பன்கள் கொழும்பு மோகன்கம்பனி யாரிடமும், யாழ்ப்பாணம் மோகன் கம்பனியாரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

### சிறுவர் போட்டி ஏஜண்டுகள்.

1. Mohan & Co { 74. Dam Street Colombo; 151 Sea Street Colombo }
2. Mohan & Co News Agent Jaffna.
3. Thamil Pannai 7, Trincomalie Street, Batticaloa,
4. Nanpan, Thuraineelavanai, Kalmunai.
5. N. Sivasamy, Palapatwela, Matale.
6. V. M. Veerappah, 159 Chetty Street, Puttalam.
7. M. S. Sri Kandan, Station Road, Kokuvil.
8. A. M. Mohamed, 1417. Galbokka, Weligama.

### இந்தியாவில் வெற்றிமணி கிடைக்குமிடம்.

1. Mohan & Co, Opp. Hindu College, Tirunelvely Juction S I
2. Mohan & Co, P. O Box 1782, Madras 1
3. Bharathi Book Depot, Main Street, Mathurai.
4. Tha sarathan Book Stall, Main Street, Thnidukkal, S. 1.

இந்தியாவிலுள்ள நேயர்கள் சந்தாத்தொகைக்கு பிரிட்டிஷ் போஸ்ரல்ஆடர் 3 ரூபாவுக்குஎடுத்து ஒன்றும் எழுதாது அனுப்பிவைக்கவேண்டும்.

## சுதந்திரன் போட்டி இல 25.

பரிசு ரூபா 1000- முடிவு திகதி 18-4-56

திட்டமான விடைகள்

இ-வ 1. முன்னணி, 2. சோதிடர் 4. கானல் 6. ஓவியக்கலை
9. கரி, 11. சுதாகர், 12. மய[ன்] 14. புத்து
16 தவாணகம் 19, கரா

மே-கீ 1 முகை 2. சோனகர் 3. தில்லை, 4. காக்கத்துவான்
5 காரியம் 7 விசும்பு 8. யதார்த்தம் 9. கமலம்
13 மரகதம்

### மாற்றுவிடைகள்

இ-வ 13. மயிலம்-மயிலிறகு; மகிலம்-மயிலிறகு;
ஒரே பெருளுடையன. எமது விடை **மகிலம்**

இ-வ 21, சாம்பு-நாவன்மரம்; சம்பு-நாவல்;
எமது விடை **சம்பு**.

இ-வ 22. சைலம்-மலை; சையம்-மலை;
சைலம் சாதாரணமான விடையெனினும் **சையம்** எமதுதெரிவாகும்

இ-வ 23, அப்பு-நீர்; அம்பு-நீர்;
அம்பு என்பதற்கு நீர்-என்ற பொருளிருப்பினும் "பாணம்" என்றே சிறப்பாகப்பொருள் கொள்ளவேண்டும் எனவே **அப்பு** சிறந்தவிடை

மே-கீ 10 கனல்-நெருப்பு; அழல்-தீ; தணல்-தீ
அனல்-தீ; தழல்-தீ;
யாவும் ஒரே பொருளுடையன- **அனல்** எமது தெரிவு, அழல், கனல் மாற்றுவிடைகள்.

மே-கீ 17 கிராம்பு-கராம்பு; கராம்பு-ஒருகடைச்சரக்கு
கராம்பு வழக்கத்திலுள்ள சொல். எமது விடை **கராம்பு**

மே-கீ 20 ஆசை-விருப்பம்; நசை-ஆசை; வசை-குற்றம்;
ஓசை-சத்தம்; பசை-ஆசை; விசை-சீக்கிரம்
பலவிடைகளிருப்பினும் குறிக்கப்பட்டவை பொருத்தமான விடைகள். **வசை** ஏற்றவிடை, மாற்றுவிடைகள்; ஓசை; ஆசை, நசை,

### இணைப்புகள்

| மே-கீ 15. | இ-வ 18, | மே-கீ, 18 |
|---|---|---|
| பகை-விரோதம் | துகை-உழக்கல் | துப்பு-துப்பு |
| படை-ஆயுதம் | புடை-அடித்தல் | புகார்-முறையீடு |
| பழி-விரோதம் | தெழி-துவைத்தல் | தெளிவு-ருசு |

மோசமான குறிப்புகள். **பழி- தெழி- தெளிவு**- எமது தெரிவு மாற்றுவிடை பகை-துகை- துப்பு- மூன்று பிழைகளை உண்டாக்கக்கூடியது. படை- புடை- புகார். கவனிக்கப்படவேண்டியது.

**கவனிக்க;-** மே-கீ 4-க்கு காக்குத்துவான் என்ற விடை இருப்பதால்
இ.ல 11 க்கு சுதாகுர் என்றவிடை அமையுமா?
இல 6 க்கு காவியக்கலை-பொருந்துமா?

# கி. இ. கு. போட்டி இல. 5

பரிசு ரூபா 1000- முடிவு திகதி 11-4-56

மாற்றுவிடைகள்

இ-வ 20 அம்-அழகு சம்-அழகு
ஒரேகருத்துடையவை. எமதுதெரிவு **சம்.**

இ-வ 25 நாகசுரம், நாகசரம், நாதசுரம், நாதசரம்
ஒரேகருத்துடையவை எமதுவிடை **நாதசுரம்.**

மே-கீ 10 கரும்பு. எறும்பு
சீனிசெய்யும் தொழிற்சாலைகளில்மாத்திரம் எறும்பு குவிவதில்லை, ஆனால் கரும்புஇல்லாது சீனி செய்யமுடியாது. ஆலைகளிலே கரும்பு குவிவதுதான் சிறப்பு. எமதுவிடை **கரும்பு.**

இ-வ 13 பழமை பழைமை
பழமை சிறந்தவிடை

மே-கீ 21 வாடை. வாயு, வாசி, வாதி
நான்கும் காற்று என்றபொருள்படுவதால் எதைச்சரியெனக்கூறுவது, எமதுவிடை **வாயு,** மாற்றுவிடை வாடை.

## இணைப்புகள்


இ-வ 3 குமரன்- மே-கீ 4 மதன்
குமாரன். மாரன்
மன்மதன் என்றதைக்கொண்டு மதன் சிறப்பானவிடையெனக் கூறுகின்றோம். எமதுதெரிவு **குமரன், மதன்,**

இ-வ 7 சரிசு- மே-கீ 4 சதிபதி
தரிசு- தம்பதி
தரிசு என்பதற்கே சரிசு என்றுண்டு, எனவே தரிசு சிறந்தவிடை. இதைக்கொண்டு **தரிசு, தம்பதி,** எமதுவிடைஎனக்கூறுகின்றோம் மாற்றுவிடை சரிசு, சதிபதி.

இ-வ 12 பரு- இ-வ 12 பணம்
மறு- மணம்
முகத்திலே மறுஇருந்தால் பார்ப்பதற்கு விகாரமாகஇருக்கும்தான் அதிகமாகஇருக்கவேண்டிய அவசியமில்லை ஆனால் பரு அதிகமாக இருந்தால் விகாரமாகத்தானே இருக்கும். எனவே பரு சிறந்தவிடை எத்தனையோவிவாகங்கள் இனபந்துக்களின்றியே நடைபெற்றுவிடுகின்றன. எனவே மணம் பொருத்தமற்றது. எனவே **பரு, பணம்** எமதுவிடை.

இ-வ 16 மசாம் மே-கீ 17 தபம்
மாதம் சபம்
இறைவனைக்குறித்துத் தபம் செய்வார்கள் என்பதிலும்பார்க்கச் செபம் செய்வார்கள் என்றுகூறுவது பொருத்தமுடையது. சபம், செபம் என்றுபொருள்படும். எனவே **மாசம், சபம்** எமதுவிடை.

இ-வ 21 வாணிகம் மே-கீ 22 கரி-
வாணிபம் பரி
ஒரேபொருளுடையவிடைகள். ஆசிரியர் இப்போட்டியில் ஒரே பொருளுடைய விடைகளாக வரத்தக்கதாகக் குறிப்புகளையமைத்துள்ளார். அதிஷ்டமுள்ளவர்கள்தான் சரியானவிடையைத் தெரிவு
செய்வார்கள் ... எமதுவிடை வாணிபம், பரி



# மாணவர் மன்றம்

கா. காமராசன் அ–இ 33 (தமிழ்த்தம்பி)

[மாணவர்மன்ற அங்கத்தவர்பலரின் வேண்டுகோளுக்கிணங்கி செல்வன் கா. காமராசனின் புகைப்படம் வெளியிடப்படுகிறது, நேரில் சந்திக்காதவர்கள் படத்திலாயினும் சந்திக்க]

அன்பார்ந்த மருமக்களே!!

நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த "வீரவாள்" இவ்விதழில் ஆரம்பிக்கிறது. மாணவர்களின் நன்மைகருதியே இதைவெளியிடுகின்றோம்.

ஈழத்திலும் தமிழ்த்தம்பிபோன்ற பல மாணவர்கள் தோன்றவேண்டும் என்பதே வெற்றிமணியின் அவாவாகும். நாடகஅமைப்பைப்பார்த்ததும் பெரிய நாடகஆசிரியர் ஒருவர்எழுதியது என எண்ணிவிடவேண்டாம். செல்வன் காமராசன் உங்களைப்போன்று படித்துக்கொண்டிருக்கும் ஒரு மாணவன். **தமிழ்த்தம்பி** அவர் புனைப்பெயர். தொடர்ச்சியாக **வீரவாளை** வாசியுங்கள்.

மணிமாமா?

---

## முக்கிய அறிவிப்பு

"**வீரவாள்**" என்றநாடகத்திலுள்ள வசனங்களை எடுத்தாளவிரும்புகிறவர்களும், நடிக்கவிரும்புகின்றவர்களும் முன்னராகவே அனுமதிபெற வேண்டும். அனுமதிதேவையானோர் வெற்றிமணி ஆசிரியருக்கு எழுதின் அவர் அனுமதிபெற்றுக்கொடுப்பார்.

---

## முன்னுரை

**இளைஞர்களுக்கு:-**

அதிலும் குறிப்பாகமாணவர்களுக்கு நாடகமில்லாத குறையையுணர்ந்தேன். ஒருநாள் என் தமிழாசிரியர் திரு டி. பாலசுப்பிரமணியம் அவர்கள் "ராஜன்! நீயொரு நாடகமெழுதேன் பார்க்கலாம்" என்றார். அவரது வேண்டுகோளின்படி இச்சிறுநாடகத்தை உருவாக்கினேன். அவரோ இதைப்படித்துவிட்டு பரவசமடைந்தார். ஊக்கமொழிகள்பல பகன்றார். அவை இன்னும் என் செவிதனிலே ஒலிக்கின்றன.

வீரவாளைத்தீட்டி இன்றுடன் ஈராண்டுகளாகிவிட்டன. எம் முதல் முயற்சியானஇதை ஈழத்திலே ஒலிக்கும் "**வெற்றிமணிக்கு**" ஒப்படைக்கின்றேன். பொறுப்புடைய நம்பிக்கையுள்ள ஸ்தாபனமென்றெண்ணி, தவறுகளிருப்பின் எடுத்துக்கூறினால் மிக்க நன்றியுடையவனாவேன். மாணவர் தோழர்கள் நடிக்கவிரும்பின் முன் அனுமதியின்றி வசனங்களை எடுத்தாளவோ நடிக்கவோ கூடாது. எனெனில் இது இங்குள்ள "அறிவு நிலையத்தாரின்" உரிமைபெற்றவை. ஈழத்தின் மூலைமுடுக்கெல்லாம் ஒலிக்கட்டும் வீரவாள். விரைவிலேயே விடிவெள்ளியின் மூலம் நாம் சந்திப்போம்.

வணக்கம்!

15-3-56

அன்பன் கா. தமிழ்த்தம்பி

# கடலும் வானமும்

கடல்:-

நீலத்தி ரைகடல் நீந்திக் கரையேற
நாட்டிலே ஆளுண்டோ சொல்லடி நீ?
ஞாலத்தைச் சுற்றுமென் நீலமேனி கண்டு
ஞாயிறுன் வேவதேன் சொல்லடி நீ?

வானம்:-

வானத்தின் ஆழத்தை வையத்தோர் கண்டிடும்
வான அளவுண்டோ சொல்லடி நீ?
ஆனவ ழிசெய்தேன் அன்புபெற அந்த
ஆதவன் செவ்வர்ணம் பாரடி நீ!!

கடல்:-

முத்தென்வ யிற்றிலே மோகன மீன்சிந்தும்
முந்நீரென் முன்நிற்க யாரடி நீ!
சித்தர்தொ ழுமந்த மாலவன் பள்ளிகொள்
சிங்காரி என்சிலம் கேளடி நீ!!

வானம்:-

கோடானு கோடியாம் கோலவிண் மீன்களின்
கோமளங் கண்டுபின் பேசடி நீ!
வாடாவை ரம்பூண்ட வானத்த ரசியான்
வானவர் வாழுமூர் நானே யடி!!

கடல்;-

ஆர்த்துமு ழங்குமென் "ஓங்காரம்" கேட்டுநீ
ஆணவம் விட்டிடு வானப் பெண்ணே
நீர்மூழ்கி யோடந்த நீராவிக கப்பலும்
நீந்திச்செல் விந்தையைப் பாரடி நீ!!

வானம்:-

மின்னல்கண் வெட்டியே வானம்முழங் கினல்
மேனிமி னுக்கிமுன் நிற்பாயோ டி?
அன்னம்போல் ஊர்ந்துசெல் ஆகாய ஊர்திகாண்
ஆகாயப் புள்ளினம் பாரடி நீ!

மேகம்;-

பெற்றவ ரேயெனைப் பேணிவ ளர்தநீர்,
பேதமை கொண்டுபி தற்ற லாமோ?
வற்றுமுந் நீரும், மேல் வானமும், வையமும்
வாலறி வன்முன்னோர் தூசி யன்றோ!
கொற்றவன் கோலோச்ச ஏறுமாறு பேசி
குற்றஞ்செய் துகுடி போட்டியிட் டால்;
வெற்றியாமோ கூறும்? ஒற்றுமை யாயிரும்
வானும்நீ ருமெல்லாம் ஒன்றல்ல வோ!

**திங்கள் :-**

வானத்தி லூர்ந்தாலும் வண்ணம திநொடி
வாடிடும் பூவன்றே வெய்யோ னின்றி!
கானம்பொ ழிகடல் காவலின் றேல்வையம்
காதலு றுவெழில் சோலை யாமோ?
ஞானத்தின் மாமுடி மோனத்தில் கண்டநீர்,
நானென்று பேசுதல் விந்தை யன்றே?
ஆனச ராசரம் அத்தனையும் செய்த
அத்தனின் முன்னிற்க யாருண் டிங்கே!!!

"நாஞ்சில் சோமன்" B. A. B. T.



## மாலைக்காட்சி

தினகரன் குணதிசையிற் சாயசந்திரிகை குணதிசையில்உதயமாகிறான். வனங்களிலுள்ள முல்லைமலர்களெல்லாம் வானத்தில் வீசஎறியப்பட்டாற்போல நீலசிறவானில் விண்மீன்கள் சோதிமயமாய் பிரகாசிக்கின்றன, விண்மதி தண்ணளிமிக்க கதிர்களைப் புவனமெங்கும் பரப்பி மாந்தருக்கு மகிழ்ச்சிகொடுக்கின்றான். நந்தவனங்களில் நறுமணங்கமழும் மலர்களிடையே இழந்தென்றல் மிதந்துசெல்கிறது.

பொய்கைகளில் குமுதங்கள் குவிந்துகாணப்படுகின்றன, மதுவுண்ணும்வண்டினங்கள் மல்லிகைமலரை வேய்ங்குழலாகக்கொண்டு இசை பாடுகின்றன. உள்ளம்கொள்ளைகொள்ளும் மல்லிகைமுதலாம் நல்லியல் மலர்கள் இதழ்விரிந்து புதுமணம் வீசுகின்றன. காலையும், மாலையும் கற்பகத்தேன் சொரியும் சோலைகளில் குயில்கள் மதுரகானம் பாடுகின்றன. தடாகங்களில் வெண்மதியின் பால் ஒளியில் அன்னங்கள் இன்பமாக நீந்துகின்றன. சந்திரனைக்கண்ட சமுத்திரம் முகிலைக்கண்ட மயில்போல மகிழ்ந்து தன் அலையாகிய கரங்களால் அரவணைக்க பொங்கி எழும்புகிறது.

புதுமணத்தம்பதிகள் தங்கள் அநித்தியமான வாழ்க்கையிலே சிறிது இன்பமனுபவித்தற்பொருட்டு கடற்கரையை நாடுகின்றனர். அங்கே அவர்களுடைய மனம் இரண்டும் ஒருருவெடுத்தாற்போல் கடலும், அலையும், நகமும், சதையும், கண்ணும், மணியும்போல கூடிப்பேசி சல்லாபித்து இன்பங்காண்கின்றனர்.

இ. ஆறுமுகம் (அ. இ 1 புத்தளம்.)

# வெற்றிமணி.

"வெற்றிமணி" இது இப்பத்திரிகையின் பெயர். ஆனால் கதையின் சுருக்கம்.....?

இதோகதை!! கொலைக்குப்பேர்போனவூர் அக்கோட்டனூர். அங்கேதான் அவ்வழகானவீடும் அமைந்திருந்தது. அவ்வீட்டிற்கருகாமையில் ஒரு காளிகோவிலுமிருந்தது. அவ்வீட்டையும், கோவிலையும் உருவாக்கிய பெருமை ஜமீந்தார் கருணாகரனுக்கேசேரும். கருணாகரன் அவ்வீட்டை பெரிய புள்ளி (பணக்காரர்) களுக்கே வாடகைக்குக் கொடுத்துவந்தான். அதில் குடியேறியவர்கள் அதிகநாட்கள் இருந்ததில்லை. அடுத்தநாளே கொலையுண்டுகிடப்பார்கள். இதனால் அறிந்தவர் யாருமே அவ்வீட்டிற் குடி புகுவதில்லை.

இதுவரையிலும் பத்துப்பன்னிரெண்டு கொலைகள் நடந்திருக்கும். இந்தமர்மத்தைக்கண்டுபிடிப்பதற்காக என்னைக் கோட்டனூருக்குமாற்றினார்கள். நான் எவ்வளவோமறுத்துக் கூறியும் இன்ஸ்பெக்டர் என்னை விடவில்லை. "அவ்வீட்டின் மர்மத்தைக் கண்டுபிடிக்காவிட்டால் உன் சி. ஐ. டி வேலை டிஸ்மிஸ் பண்ணப்படும்." என்று கண்டிப்பான குரலிற் கூறினார் இன்ஸ்பெக்டர், வேறுவழியின்றிச் "சரி" என்று ஒப்புக்கொண்டேன்.

அன்று மாலை கோட்டனூருக்கு வந்து அவ்வீட்டின் சொந்தக்காரரானகருணாகரனைக்கண்டு பேசி அவ்வீட்டை மாதம்இருபதுரூபாவாடைக் கொடுத்தேன். அன்றிரவுமுழுவதும் சிந்தனையம்பால் என்மனம் தாக்குண்டிருந்ததால் நித்திரையே வரவில்லை. உடனே எழுந்து நான்படுத்திருந்த இடத்தில் தலகணியைப்பரப்பி ஒருவர் படுத்திருப்பதுபோன்று மேலே சீலையால் மூடிவிட்டு நான் ஒரு கதவிற்கருகில் மறைந்துகொண்டேன்,

இரவு இரண்டுமணியிருக்கும். "டுமீர்!!!" என என் படுக்கையை நோக்கித் துப்பாக்கிக்குண்டுபாய்ந்தது. அதைத்தொடர்ந்து ஒரு உருவம் வந்துகொண்டிருந்தது. அவ்வுருவத்தைநோக்கி என்துப்பாக்கிக்குண்டும் அதேநேரத்திற் பாய்ந்தது அடுத்தகணம் ஐயோ!! என்றலறிக்கொண்டு கீழேசாய்ந்தது அவவுருவம். கையிலிருந்த ரோச்லைட் மூலம் அவ்வுருவம் யாரென்பதை அறிந்துகொண்டேன். அதேநேரத்தில் அருகிலிருந்த காளி கோவிலின் மணியும் ஒலித்துக்கொண்டிருந்தது, என் வெற்றிக்கறிகுறியாகத்தான் அம்மணி ஒலிக்கிறது எனநினைத்தேன், ஆனால் அப்படியல்ல.

கருணாகரன் ஓர் கயவன். அவனே அங்கு குடியேறுபவர்களைக் கொன்றுவிட்டு அவர்களின் பொருளை எல்லாம் அபகரித்து வந்தான் அப் பொருளை வைப்பதற்காகவே அருகில் ஒரு காளி கோவிலையும் அமைத்துக்கொண்டான், அவன் துப்பாக்கியால் சுடும்

பொழுது துப்பாக்கிச்சத்தம் கேட்காமல் இருப்பதற்காக் காளிகோவிலில் மணியை அடிப்பதற்கு ஒரு கையாளையும் அமர்த்தியிருந்தான் என்பதைப் பின்தான் தெரிந்துகொண்டேன்.

அன்று வீணனுக்காக ஒலித்த அவ் "வெற்றிமணி" இன்று நீதிக் காகவும், நேர்மைக்காகவும் புத்தக உருவில் ஒலித்துக்கொண்டிருக் கிறது போலும்.

இ. நடராசா [அ. இ. 19]
கிளிநொச்சி.

# பெண் கல்வி

**பெண்களுக்கு கல்வி அவசியமா? இல்லையா?** என்பது இன்னும் தீராத பெரும்பிரச்சினையாக இருந்துவருகின்றது. பென்களுக்கு கல்வி அவசியம் வேண்டும். குழந்தையைப்பெறுபவள் பெண். பெற்றபிள்ளையை ஈ எறும்புமொய்க்காமல் பாதுகாத்துத்தொட்டிலிலிட்டுத்தாலாட்டிப் பாலூட்டி வளர்ப்பவள் பெண். இவற்றைச்செய்கின்ற பெண் கல்வியறிவு அற்றவளாக இருந்தால் எவ்விதம் நற்பழக்கங்களைப் பாலர்களுக்குப் புகட்டமுடியும். தீயவழியில் ஒரு பிள்ளைநடந்தால் "**தாய் வளர்த்தவளர்ப்பு**" என்று கூறுவதை நாம் காதாரக் கேட்கின்றோம்.

இதுமட்டுமா? வாழ்க்கை யென்னும் வண்டியைக் கணவன்மனைவி என்ற இரு எருதுகளும் இழுத்துச்செல்லுகின்றன. இவற்றில் ஒன்று சொத்தியாக அல்லது குருடாக இருந்தால் வாழ்க்கையென்றவண்டி மேடு பள்ளங்களில் விழுந்து சுக்குநூருய்விடும். இல்லத்துக்கு உரியவள் இல்லாள். இல்லறக்கப்பலில் இலட்சிய மாலுமியாக இருந்தாற்றான் கப்பலும் நேர்வழியில் செல்லக்கூடும். இவள் அறிவற்றவளாகஇருந்தால் ஆழியிலே அமிழ்திவிடுமென்பதில் ஐயமில்லை. ஆடவர் அல்லலுறும்வேளை அருகிலிருந்து ஆறுதல் மொழிகூறி அன்புகாட்டுபவள்பெண். பாலர் தொடக்கம் பல்விழுந்த கிழவர்வரை பாதுகாப்பவள் பெண். ஏன்?? வாழ்க்கையின் அச்சாணி பெண்என்றேகூறிவிடலாம். இப்படியான பெண்கல்வியறிவற்றவளாக இருந்தால் எப்படி வாழ்க்கை வளம்பெறும்,

இவற்றையெல்லாம் அறிந்திருந்தும் நம் சமூகத்தவர் என்னசெய்கின்றனர். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு" என்ற அடிப்படையில் பெண்களைப் பேதையரென ஒதுக்கினர். கோதையர்கள், அறிவு பயில்வது ஆகாதென அகராதிகள் வரைந்தனர். நாரியரின் ஒவ்வொருகாரியத்திலும் நயவஞ்சகப் பார்வையை நாட்டினர். இதுமட்டுமா? "பாழும் சமூகம்" என்னும் பட்டத்தையும் பரிசிலாகக்கொடுத்தனர். இதன்பயனாக

நாம் கண்டதென்ன? மேடையில் மட்டும் வீரம்ததும்பத் தத்துவம் பேசும் வீண்வேடதாரிகள். ஒட்டிநின்று ஓரம்பேசும் உலுத்தர்கள், காதிருந்தும் கேட்காத செவிடர்கள். சோம்பித்திரியும் சோம்பேறிக் கூட்டத்தவர்கள் இவர்களே,

மேல்நாட்டாரைச் சற்று உற்றுநோக்கிப்பாருங்கள், ஒவ்வொரு பெண்ணும் கல்வியறிவுள்ளவளாகையால் ஆளில்லா விமானமும், அணுக்குண்டும் ஆராய்துகண்ட அரிய விஞ்ஞானிகளைப் பெற்றனர். தூக்குக் கயிற்றையும் துப்பாக்கிமுனையையும் கட்டிமுத்தமிடும் வீரத் தியாகிகளைப் பெற்றனர், இதையெல்லாம் கண்டிருந்தும் சிலர் அந்தக்காலத்தில் பெண்கள் கல்வி கற்கவில்லையே என்று கேட்கின்றனர், ஏன்?

வெற்றிக்கொடிகாட்டி வீரச்சங்கை ஊதி ஒற்றைத்தனிக்கோலாட்சி செலுத்திய விக்ரோறியாமகாராணி யார்? நாளை உதயமாகாதே என்று சூரியனைத்தடுத்த நளாயினி யார்?? காலனிடமிருந்து கணவனை மீட்டகாரிகை சாவித்திரியார்? அமுதமொழிதந்த ஒளவைப்பிராட்டியார்? ஏன்? இன்று நம் முன்னே வீரகர்ஜனை செய்துகொண்டிருக்கும் விஜயலட்சுமி பண்டிட் யார்??? இவர்களும் பெண்கள்தானே?


பெண்சமூகம் வாளாவெட்டியாக இருந்தால் எம்சமூகம் வரண்டபாலைவனமாகவேவரும். ஒவ்வொரு பெண்ணும் நல்ல அறிவுள்ள ஆண்மையுள்ள நற்றுயாகஇருந்தால் எமதுசமூகம் மற்றச் சமூகங்களைப்போல அயராதுழைத்து அறிவுச்சமூகமாக ஆண்மையுடன் வாழும் என்பதில் ஐயமில்லை.

"வாழ்க!! பெண்சமூகம்,"

அ க. பாடசாலை- ஒட்டமாவடி. — எஸ். ஏ. எஸ். மகுமூது

—✲—

# இந்த மருமகன்



பேனு நண்பர்களுடன் தொடர்பு வைத்துக் துக்கொள்ள விரும்புகின்ருர். இவரின் பொழுது போக்குகள்:- முத்திரைகள், புகைப்படங்கள், கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துப் பத்திரங்கள் சேர்ப்பது, இவர் திறமையடைந்துள்ள விளையாட்டுக்கள்;- ஓட்டம், பாய்தல், உதை பந்தாட்டம் கரபந்தாட்டம், ரேபிள் ரெனிஸ்,

அல்பிரட் டி சில்வா [அ. இ. 16.]

# வீ ர வ ா ள்.

(வசனம்;- கா. தமிழ்த்தம்பி.)

**பின்குரல்**

"ஹஹ்ஹா!...மமதையைவீழ்த்தி, மாளிகைகளை மட்டம்தட்டி, மடமையைமாய்த்து, மதவாதிகளையோட்டி, சாகசத்தால் சதிராடிய சாயஅதரங்களின் சாரமற்றபோக்கிற்கு சவுக்கடிகொடுத்ததுதான் ஏன்? ஏன்? மதம்பிடித்தலைந்த மதயானைகளின் மத்தகத்தைப் பிளந்து, மலைப்பாம்புகளின் வயிற்றைக்கிழித்து சாஸ்திரங்களுக்குச் சாவுமணியடித்ததுதான் ஏன்? ஏன்? உலகசரித்திரத்தையே மாற்றியமைத்த ஒளிவிளக்குத்தான் "ஏன்?

ஏன்? என்ற இடிமுழக்கம்தான்எத்தனையோ சர்வாதிகாரிமாளிகைகளைமட்டம்தட்டி ஏகாதிபத்தியங்களின் எலும்பையொடித்து இழிகுணர்களுக்கும் இதோபதேசம்செய்து திருத்தியிருக்கிறது. ஏன்? என்ற வினவிற்கு கல்லடி, சொல்லடி, நச்சுக்கோப்பை, துப்பாக்கிக்குண்டு தூக்குமேடை முதலியபரிசில்கள் வீணர்களால் கொடுக்கப்பட்டுள்ளன. விரைந்துவந்த ஏகாதிபத்தியத்தின் விலாவினிலே வேலைப்பாய்ச்சி, வீறிட்டு வரும் குதிர ஆற்றினிலே குளித்து ஊளையிட்டகுள்ளநரிகளின் 'குடலை மாலையாக அணிந்ததுதான்வீரவாள்! அந்தோ!! கீர்த்திமிக்க கிரேக்கப் பண்புமிக்க பாரதத்திலே மண்டியிடுவதைப்பாரீர்! ஹஹ்ஹா!... விளையாட்டுத்தம்பியின் வீரவாள் வீணர்களுக்கோர்பேரிடி! இதோ! வெடிக்கிறதுஏன்? என்றஎரிமலை. ஹஹ்ஹா... ஹஹ்ஹா... (குரல்நிற்கிறது.)

[பயங்கரமானசிரிப்புடன் முதற்காட்சி ஆரம்பமாகிறது.]

**முதற்காட்சி.**

(யானைகளின் பிளிறலும், குதிரைகளின் குளம்படிச்சத்தமும் கேட்கின்றது. கிரேக்கஅதிபன் **"அலெக்ஸாந்தர்"** மிடுக்காகத்தம் இடுப்பில் இருகைகளையும் வைத்துக்கொண்டு பெருமிதத்தால் கர்ஜிக்கின்றான். அவனைச்சுற்றிலும் ஆயுதம்தாங்கிய வீரர்கள் நிற்கின்றனர். அலெக்ஸாந்தரின் முன்னால் ஜீலம் நதிக்கரை வேந்தன் **"புருஷோத்தமன்"** கைதுசெய்யப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறார். அவரதுகண்களிலே தீச்சுடர்பறக்கின்றது விசாரணை தொடங்குகிறது)

அலெ;- ஹஹ்ஹா!... ஹஹ்ஹா!...

புரு;- நிறுத்தும் உமதுகேலிச்சிரிப்பை! வெள்ளாட்டின்விலாவையொடித்து வேடிக்கைபார்க்க விநோதப்பட்டியில்தயாரிக்கவெறிகொண்டலையும் ஓநாயே! அடக்கு உன் அர்த்தமற்ற சிரிப்பை வீரத்தின்முன்னே விளையாடுவதுவிவேகமல்ல.

அலெ;- குருடனின் முன்பே ஒளிவிளக்கு, கோழையின்கையிலே குத்தீட்டி, செவிடனின்செவிதனிலே சிருங்காரகீதம். நன்று இருக்கிறது உமதுகூற்று! பைத்தியக்காரத்தனமான உமதுஆர்வத்துக்குப்பெயர் வீரமோ?

புரு:- உலகஉத்தமர்களுக்கு உம்போன்ற உலுத்தர்கள்சூட்டும் பட்டங்கள் அவை. ஆனால் அவையாவும் சுதந்திரத்தின் முன்பே சுக்குநூறாக்கப்பட்டுவிடும் என்பதைமட்டும் நன்றாக உணர்ந்துகொள்.

அலெ:- "சட்! மடையனே! தோற்றபின் தொகையரு ராகம்பாடி வீழ்ந்தபின் விபரீதமாக உளறுவதுதான் உன்போன்ற அயோக்கியர்களின் செயலா?

புரு:- அல்ல - தோற்றபின் பல்லையிழித்து உயிரைப் பிச்சை கேட்கும் பழக்கமே எங்கள் பாரதத்தில் கிடையாது, விரைந்துவந்தஏகாதிபத்தியத்தின் விஷப்பல்லைத்தான் நாங்கள் பிடுங்குவோமேயன்றி உம்மைப்போல் வெறிகொண்டலையமாட்டோம்!

அலெ:- பொருத்தமில்லாதபதில்! ஹஹ்ஹஹ்ஹா!—புயலைத்தடுக்கபூவின் மணமா? எரிமலையைத் தடுக்க எண்ணைக் கிணறுகளா? களஞ்சியத்தைக் காலியாக்க கரையான் புற்று? சிறகொடிந்த பறவையே! வீறுப்புமொழி பேசிய வீணனே! எங்கே உன் வீரம்? எங்கே உன் நாட்டுப்பற்று? எல்லாம் அடங்கிவிட்டனவே என்று ஆயாசப்படுகின்றாயா? விவேகமற்றவனே! இந்த வீர வாளிடமா உன் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டு? கண் சிமிட்டும் நேரத்திலே களம்பல கண்டு காவலர்களைக் கதிகலங்கச் செய்து, காரணங்கேட்டவனுக்கு கைலாசச் சீட்டுக்கொடுத்து வினைக்குறியெழுப்பியவனின் விலாவையொடித்து எட்டுத்திக்கும் வெற்றிமுரசு கொட்டிவரும் என்னிடமா உன் வீறுப்பு? விவஸ்தையற்றவனே! எடுத்துப்பார் ஏடுகளை! கிரேக்கத்தின் கீர்த்தியை புவனமெல்லாம் புகழுவதைக்காண்பாய் கண்குளிர, எச்சரித்தும் கேளாமல் "அடிமைத்தனம் ஒரு சாக்காடு" என்று ஆர்ப்பரித்து வந்த அறிவிலியே! இப்போதாவது புரிந்ததா!

புரு:- புரிந்தது. வேந்தே, புரிந்தது! உம்து புத்திகெட்ட போக்கினால் ஏற்பட்ட புதைவனங்களின் ஓலக்குரல் நன்றாகக் கேட்கிறது. நாடுகாப்பதாக நடித்து நாசத்தை வளர்க்கும் நல்லறிவாளனே! உமது மகுடத்திரையிலே மட்டரகமான போக்கிலே உமது கோரத் தர்பாரிலே எத்தனையெத்தனை கொடுஞ்செயல்கள் நடக்கின்றனவென்று நன்றாகப்புரிந்தது! நாசத்தின் நேசனே! விநாசமே ஆயுதமாகக் கொண்ட வெறியனே! பகைவர்கண்டு பதைபதைக்கும் திருவுருவம் படைத்த இமயத்தை எதிர்த்து

வரமுடியாமல் பேடியைப்போல கொல்லைப்புறவழியாக கைபர் கணவாய் வழியே குக்கல்போல ஓடிவந்த-அல்ல படைதிரட்டி வந்த பராரி வேந்தரின் படைபலம் நன்ருகத்தெரிகிறது!

அலெ—. [கோபத்துடன்] புருஷோத்தமா! அடிபட்ட நாயே! குரைக்காதே! அளந்துபேசு! சட்டத்திற்கு அடங்கிநட! நீ என்கைதி என்பதை மறவாதே!

புரு:— சட்டமாமே, சட்டம்! உம்மைப்போன்ற சாரமற்ருேருக்கு சட்டம் ஒருகேடா? சிலரின்வாழ்வை தீஞ்சோலையாகவும், பலரின் வாழ்வைப்பாலையாகவும் ஆக்கிவரும் அழிவுசாசனத்துக்கு பெயரா சட்டம்? வீண்வெறி கொண்டலையும் வேங்கையே! உம்கொட்டத்தையடக்க, குடலைக்கிழித்து மாலையாக அணிய புறப்பட்டுவிட்டனர். புரட்சிவீரர்கள்! புகுந்துவிட்டனர்! புது வெறிகொண்டு! போர்க்குரல் ஒலிக்கஆரம்பித்துவிட்டது! இனியும் ஆமைபோல் அடங்கிக்கிடப்பார்களென்றெண்ணுதே!

அலெ- சட்! மடையனே!

[தம் இரு கைகளையும் தட்டுகிருர்! ஏதோ சப்தம்கேட்கவே மிரண்டுநிற்கிருர் போரஸ் அப்போது..........]

[வளரும்]


# மதுரைத் தமிழ்ப் பேரகராதி

**போட்டிநேயர்களும்,**

**ஆசிரியர்களும்,**

**மாணவர்களும்.**

பலநாட்களாக எதிர்பார்த்த மதுரைத்தமிழ்ப் பேரகராதி இப்போகிடைக்கும். இரண்டு பகுதிகள் மொத்தம் 2500 பக்கங்கள். விலை தபாற்செலவுட்பட 30— ரூபா. தேவையானேர் ரூபா 30 உடனேயனுப்பிவைக்கவும்.

ஆசிரியர், வெற்றிமணி, நாவலப்பிட்டி.



## விளம்பரவிகிதம்.

| | | | |
|---|---|---|---|
| முழுப்பக்கம் கவர் | ரூபா 10. | 1/2 பக்கம் கவர் | ரூபா 6. |
| முழுப்பக்கம் உட்பக்கம் | ரூபா 8. | அரைப்பக்கம் | ரூபா 5. |
| 1 அங்குலம்X5 அங்குலம் | ரூபா 1. | | |


ஆசிரியர் . ஏ-கே. சாம்; அச்சுப்பதிப்பு மிட்லன்ட் பிரின்டர்ஸ்-நாவலப்பிட்டி